அவிநாசி பேரூராட்சியில்

ரூ.20 லட்சம் மதிப்பில் மேல்நிலை குடிநீர் தொட்டி

செல்வராஜ் எம்எல்ஏ பணிகளை துவக்கி வைத்தார்

▶ அவிநாசி நேரு வீதியில், ரூ.20 லட்சத்தில் மேல்நிலைத்தொட்டி அமைக்க பூமி பூஜை நடைபெற்றது. இதில்,திருப்பூர் மாவட்ட திமுக செயலாளர் செல்வராஜ் எம்எல்ஏ பங்கேற்று பணிகளை தொடங்கி வைத்தார்.

அவிநாசி, மார்ச்15:அவிநாசி பேரூராட்சியில், 15 ஆவது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ், நேருவீதியில், ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத்தொட்டி அமைப்பதற்கான பணிகளுக்கான பூமிபூஜையும்,மேலும், சீனிவாசபுரம் மற்றும் கஸ்தூரிபா வீதி ஆகிய பகுதியில் ரூ. 18 லட்சத்தில், தார்சாலை அமைக்கும் பணிகளுக்கான பூமிபூஜையும் நடைபெற்றது.

இதில், திருப்பூர் மாவட்ட திமுக செயலாளரும் திருப்பூர் தெற்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான செல்வராஜ் பங்கேற்று, இந்த பணிகளை தொடங்கி வைத்தார்.மேலும் 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ், பேரூராட்சிக்கு ரூ. 12 லட்சத்தில் டிராக்டர் வாங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில், மாவட்ட திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி,திருப்பூர் மாவட்ட திமுக அவைத்தலைவர் நடராஜ், மாவட்ட திமுக பொருளாளர் சாமிநாதன், மாநகராட்சி கவுன்சிலர்ராதாகிருஷ்ணன், அவிநாசி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, அவிநாசி ஒன்றிய திமுக செயலாளர் சிவப்பிரகாஷ்,அவிநாசி பேரூர் திமுக செயலாளர் திராவிடன் வசந்தன், முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் செல்வரங்கம்,மாவட்ட வழக்கறிஞர் அணி பத்மநாபன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சாந்தி,பேரூராட்சி முன்னாள் தலைவர் புஷ்பலதா,இராயர்குமார்,இராயப்பன், அவிநாசி லோகு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

15 மாணவ-மாணவிகளுக்கு

ரூ.11.25 லட்சம் மதிப்பில் கால வைப்பு தொகை பத்திரங்கள்

▶ மாணவ-மாணவிகளுக்கு கால வைப்பு தொகை பத்திரங்கள் கலெக்டர் கிறிஸ்துராஜ் வழங்கினார். அருகில் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி கீதா மற்றும் பலர் உள்ளனர்.

கலெக்டர் கிறிஸ்துராஜ் வழங்கினார்

திருப்பூர், மார்ச்15: 15 மாணவ மாணவிகளுக்கு ரூ.11.25 லட்சம் மதிப்பில் கால வைப்பு தொகை பத்திரங்கள் கலெக்டர் கிறிஸ்துராஜ் வழங்கினார்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தமிழ்நாடு தொடக்க கல்வி இயக்ககம், தமிழ்நாடு மின்விசை மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 15 மாணவ, மாணவிகளுக்கு ரூ.11.25 லட்சம் மதிப்பீட்டிலான கால வைப்புத்தொகைக்கான பத்திரங்களை கலெக்டர் கிறிஸ்துராஜ் வழங்கினார்.

இது குறித்து கலெக்டர் கிறிஸ்துராஜ் கூறியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்ககத்திலிருந்து தமிழ்நாடு மின்விசை மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் சார்பில் வருமானம் ஈட்டும் தாய் அல்லது தந்தையர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட கால வைப்புத் தொகைக்கான ரூ.50 ஆயிரம் மற்றும் ரூ.75 ஆயிரம் பத்திரங்கள் பெறப்பட்டது. அந்த வகையில் தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு மின்விசை மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 15 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.11.25 லட்சம் மதிப்பீட்டிலான கால வைப்பு தொகைக்கான பத்திரங்கள் வழங்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக்கல்வி அதிகாரி கீதா,மாவட்ட கல்வி அலுவலர் தேவராஜன், உதவி திட்ட அலுவலர்கள் சிவக்குமார். அண்ணாதுரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கோவை செழியன் நினைவு தினம் பல்வேறு தரப்பினர் மலரஞ்சலி

▶ கோவை செழியன் 24வது நினைவு தினத்தையொட்டி காங்கயம் அருகே உள்ள அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்திய கொ.ம.தே.க நிர்வாகிகள்.

காங்கயம், மார்ச்15:கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை நிறுவனத்தலைவர் கோவை செழியனின் 24ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது நினைவிடத்தில் பல்வேறு அமைப்பினர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகிலுள்ள குங்காருபாளையத்தில் கொங்கு வேளாளகவுண்டர்கள் பேரவையின் முன்னாள் தலைவரும்,காங்கயம் முன்னாள் எம்எல்ஏவுமான கோவை செழியனின் நினைவிடத்தில் நேற்று தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை நிறுவன தலைவர் உ.தனியரசு தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தீரன் சின்னமலைக் கவுண்டர் பேரவை சார்பாக சுவிதா யுவராஜ் தலைமையிலும், நமது கொங்கு முன்னேற்ற கழகம் சார்பாக தங்கவேல் தலைமையிலும், நாம் கொங்கு உழவர் பெருமன்றம் சார்பில் தலைவர் பொன் முருகேஷ் தலைமையிலும், கொங்கு தமிழர் எழுச்சி பேரவை சார்பில் தலைவர் கொங்கு சங்கர் தலைமையிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி துணை பொதுச்செயலாளரும் நாமக்கல் எம்.பி.யுமான சின்ராசு, மாநில இளைஞர் அணி செயலாளர் சூரியமூர்த்தி, தலைமை நிலைய செயலாளர் சுரேஷ் பொன்னுவேல், திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் சக்திவேல், குண்டடம் ஒன்றிய செயலாளர் செல்வக்குமார் உள்பட கட்சி நிர்வாகிகள் கலந்து கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி நிகழ்ச்சியின் போதுகோவை செழியனின் மகன் செம்பியன் சிவக்குமார், அஞ்சலி செலுத்திய அனைத்து அமைப்பினர்கள் உடனிருந்தார்.

கழுத்தை நெரித்து பெண் கொலை

உறவினர்களை அடையாளம் காண முடியாததால் பிரேத பரிசோதனை தாமதம்

போலீசார் தீவிர விசாரணை

திருப்பூர், மார்ச்15: திருப்பூரில் கள்ளக்காதலனால் கொலை செய்யப்பட்ட பெண் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். உறவினர்களை அடையாளம் காண முடியாததால் இறந்த பெண்ணின் உடலை பிரேத பரிசோதனை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் நடராஜ் தியேட்டர் ரோடு சாயப்பட்டறை வீதியில் உள்ள ஒரு வீட்டில் பெண் ஒருவர் இறந்து கிடப்பதாக கடந்த 3ம் தேதி வடக்கு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அந்த தகவல் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் அந்த பெண்ணின் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். போலீசார் விசாரணையில் அந்தப் பெண் ஈஸ்வரி(48) என்பதும், தனது கள்ளக்காதலன் ஆறுமுகத்துடன் வசித்து வந்ததும் தெரிய வந்தது. தொடர்ந்து தலைமறைவான ஆறுமுகம் (49) என்பவரை பிடித்து போலீசார் விசாரித்தனர். போலீசார் விசாரணையில் மதுரை மாவட்டம் மேலூரில் உள்ள ஒரு தோட்டத்தில் பணியாற்றியபோது ஆறுமுகத்திற்கு, ஈஸ்வரி அறிமுகமாகியுள்ளார். அப்போதிலிருந்து இருவருக்கும் கள்ளக்காதல் மலர்ந்துள்ளது. தொடர்ந்து சாயப்பட்டறை வீதியில் உள்ள ஒரு வீட்டில் வசித்த போது கள்ளக்காதலி ஈஸ்வரி வேறு ஒருநபருடன் பேசிக்கொண்டிருந்ததால் ஆறுமுகத்திற்கு சந்தேகம் ஏற்பட்டது. இதுகுறித்து ஆறுமுகம், ஈஸ்வரியிடம் கேட்டுள்ளார். அப்போது இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த ஆறுமுகம் சேலையால் ஈஸ்வரியின் கழுத்தை நெரித்தும், தலையணையை வைத்து அமுத்தியும் கொலை செய்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்தது.

தொடர்ந்து வடக்கு போலீசார் ஆறுமுகத்தை 7 ம் தேதி கொலை வழக்காக மாற்றி ஆறுமுகத்தை கைது செய்தனர். இந்நிலையில் கொலை செய்யப்பட்ட பெண் ஈஸ்வரி எந்த ஊரை சேர்ந்தவர்? அவருடைய உறவினர்கள் யார்? என்பது குறித்த எந்த தகவலும் இது வரை தெரியவில்லை. இதனால் ஈஸ்வரியின் உடலை பிரேத பரிசோதனை செய்ய முடியாமல் உள்ளது. இந்நிலையில் வடக்கு போலீசார் ஈஸ்வரியின் உறவினர் குறித்து விசாரித்து வருகின்றனர். மேலும், ஈஸ்வரி குறித்து அடையாளம் தெரிந்த உறவினர்கள் யாரேனும் இருந்தால் வடக்கு போலீஸ் நிலையத்தை தொடர்பு கொள்ளுமாறு போலீசார் தெரிவித்துள்ளனர். இது குறித்து வடக்கு போலீசார் பல்வேறு இடங்களில் போஸ்டர் ஒட்டியுள்ளனர்.

தெற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில்

நாடாளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் பணிமனை இன்று திறப்பு

அமைச்சர்கள், எம்.பி.பங்கேற்கிறார்கள்

திருப்பூர், மார்ச்15: திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநகராட்சி 4-வது மண்டல தலைவருமான இல. பத்மநாபன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் நாடாளுமன்ற தேர்தலுக்காக பணிமனை திறப்பு விழா இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையம் பிரிவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயம்”,“தளபதி அரங்கில்” நடைபெறுகிறது. இதற்கு நான் (இல.பத்மநாபன்) தலைமை தாங்குகிறேன். திருப்பூர் தெற்கு மாவட்டக்கழக வழக்கறிஞர் அணி தலைவர் செல்வராஜ்,துணைத்தலைவர் சி.நடராஜன், அமைப்பாளர் டி.எஸ்.பொன்ராஜ், துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், சி.எஸ். சிவக்குமார்,எம்.இந்திரகலை நாச்சியார், இரா. மகேஸ்வரன்,கே.ஷாஜகான் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இதில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன்,கழக மகளிர் அணி துணைச்செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கிறார்கள். எனவே இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முத்தூர் பேரூராட்சியில்

ரூ.42 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகள்

காங்கயம்,மார்ச்15: முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் தேவை பூர்த்தி செய்ய வேண்டும் என முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்து வந்தனர். பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விஸ்தரிப்பு பணிகளுக்காக ரூ.42 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதைத்தொடர்ந்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகளை முத்தூர் பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் செயல் அலுவலர் ஆல்பர்ட் தியாகராஜன், முத்தூர் பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள், அலுவலக பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெள்ளக்கோவிலில்

சூரியகாந்தி விதை ரூ.12 லட்சத்துக்கு விற்பனை

வெள்ளக்கோவில், மார்ச் 15: வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.12 லட்சம் மதிப்பில் சூரியகாந்தி விதை விற்பனை நடைபெற்றது.

காங்கயம்,முத்தூர்,தேனி,சரணபட்டி,மஞ்சப்பட்டி,அரவக்குறிச்சி, ஈசநத்தம், வேடசந்தூர், வாகரை, வாணியம்பாடி, மூலனூர்,கரூர்,ஸ்ரீரங்கம்,திருச்சி உள்ளிட்ட பகுதியிலிருந்து 28 ஆயிரம் கிலோ சூரிய காந்தி விதைகளை கொண்டு வந்திருந்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடீஸ்வரன் முன்னிலையில் நடந்த ஏலத்தில், ஈரோடு, முத்தூர், காரமடை,நடுப்பாளையம், காங்கயம், கொடுமுடி பகுதியைச் சேர்ந்த 10 பேர் கலந்து கொண்டனர். இதில் ஒரு கிலோ விதை அதிகபட்சமாக ரூ.45.62க்கும், குறைந்தபட்சமாக ரூ.40.65க்கும் விற்பனை யானது. மொத்தம் 12 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் நடைபெற்றது.

மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் முப்பெரும் விழா

திருப்பூர், மார்ச்15: திருப்பூர், செல்லம்மாள் காலனி, மாநகராட்சித் தொடக்கப் பள்ளி ஆண்டுவிழா முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு 24 வது வார்டு கவுன்சிலர் நாகராஜ் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் நாகராஜ் கணேஷ்குமார் வரவேற்றார்.

திருப்பூர் வட்டாரக் கல்வி அலுவலர் முஷ்ரக் பேகம் ,முன்னாள் கவுன்சிலர் சின்னச்சாமி,பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பொன்.பழனிச்சாமி பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் மோகனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி வளாகத்தின் முன்பு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு நடனமாடினர்.மேலும் தமிழ், ஆங்கில பேச்சுபோட்டிகளும் நடைபெற்றது.தொடர்ந்து மாவட்ட அளவில் சிலம்பம், கராத்தே, ஓவியப்போட்டி ஆகியவைகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர். தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் சிறந்த நன்கொடையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர் நாகராஜ்க்கு வட்டாரக் கல்வி அலுவலர் அரசின் நினைவுப் பரிசினை வழங்கினார். தொடர்ந்து பலர் சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பொது அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சிங்கப்பூர் நகர் பின்புறம், கதவு எண். 27B, சந்ரோதயா கார்டன் எக்ஸ்டன்ஷனில் வசிக்கும் சுப்பையா செட்டியார் மகன் S.ஆறுமுகம் ஆகிய என் கட்சிக்காரரின் இன்ஸ்ட்ரக்ஷன் படி நான் தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

மேற்படி என் கட்சிக்காரர் உயர்திரு கோவை DEBTS RECOVERY TRIBUNAL நீதிமன்றத்தில் கோவை Primal Capital and Housing Finance Corporation (Ltd) எங்கள் மீது உயர்திரு திருப்பூர் மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் Cr.L.M.P.No.11132/2023 என்னும் வழக்கில் உத்தரவு வாங்கியதை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி வழக்கு IA 919/2024 என்னும் நம்பராகி வரும் 28.03.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட என் கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்க முயற்சிக்க வேண்டாம் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

சொத்து விபரம்

திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்பதிவு வட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி, கணக்கம்பாளையம் கிராமம், புலத்தில் க.ச.261, க.ச.273, க.ச.260, க.ச.244/A1 நெ காலைகளில் மனை இடங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள “சந்ரோதயா கார்டன்ஸ் எக்ஸ்டன்ஷன்” என்னும் மனைப்பிரிவில் கண்ட மனை எண். 27-B (இருபத்தி ஏழு B) நெ காலி மனை இடத்திற்கு செக்குபந்தி:–

60’ அடி அகல கிழமேல் திட்ட சாலைக்கும்–வடக்கு, 23, 24 நெ.காலி மனை இடங்களுக்கும்–தெற்கு, 27–A நெ. காலி மனை இடத்திற்கும்–கிழக்கு, 28–A நெ. காலி மனை இடத்திற்கும்–மேற்கு. இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 20’0’’, கிழமேலடி தென்புறம் 20’0’’,தென்வடலடி கிழபுறம் 50’0’’,தென்வடலடி மேல்புறம் 50’0’’ இந்தளவுள்ள 1000 சதுரடிக்கு 92.90 சதுர மீட்டர் (2.30 சென்ட்) உள்ள காலி மனை இடமும், அதில் கட்டப்பட்டுள்ள டார்ச் வீடும் மேற்படி மனை இடத்திற்கு மேற்படி மனைப்பிரிவில் கண்ட அனைத்து ரோடுகளிலும் போக்குவரத்து செய்து கொள்ளும் தட பாத்தியங்களும் சகிதம்.

A.BALAMURUGAN, B.Sc.,B.L.,
ADVOCATE
No.105A/B, Venkateswara Nilayam,
Srinivasa Street, Udumalpet,
Cell: 9524998882, 9629116662

பொன்னாபுரம் ஊராட்சி

தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்பூர் மாவட்டம்

வரியினங்கள் உயர்வு முக்கிய அறிவிப்பு

பொன்னாபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் பிரிவு 172 விதி - 3 துணை விதி-1ன் படியும் இவ்ஊராட்சியின் கிராம சபா தீர்மானம் 24/26.01.2024 படியும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வரியினங்கள் உயர்த்தபட வேண்டும். அதன்படி 2019-20 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. தற்போது 2024-25 ஆம் ஆண்டு முதல் (01.04.2024) முதல் ஏற்கனவே உள்ள மூலதன மதிப்பிலிருந்து கூடுதலாக சொத்து வரி **25%** உயர்த்தியும் குடிநீர் கட்டணம் வைப்பு தொகை நாளது தேதியில் உள்ள நடப்பு நிலையில் மற்றும் இதர வரியினங்கள் அரசு விதிமுறைகளின் படியும் உயர்த்துவது குறித்து ஆட்சேபனை இருந்தால் 15 தினங்களுக்குள் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நேரில் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கோள்கிறேன்.

இப்படிக்கு :
தலைவர்,
துணை தலைவர்,
வார்டு உறுப்பினர்கள்

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

GRIHUM
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)
பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே-411036.

கோரிக்கை அறிவிப்பு சர்ஃபாசி சட்டம், 2002-இன் பிரிவு 13(2)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/ உப கடன்தாரர்/ ஆகிய நீங்கள், உங்கள் அசையா சொத்து அல்லது சொத்துகளையோ, சொத்து வசதிகளையோ வீட்டுக் கடன்/கடன்கள் பெறுவதற்காக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜிஐ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பின்னர் கடனீட்டுக் கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும் நிறுவனத்தில் அடமானம் வைத்திருக்கிறீர்கள். நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், உங்களுடைய கடன் செயல்படாத சொத்துப் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டு (அமலாக்க) விதிகள் 2002 இன் கீழ் திருப்பிச் செலுத்தப்படாத கடனை மீட்பதற்கான கோரிக்கை அறிவிப்பு உங்களுடைய கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதை நீங்கள் பெற்றுக் கொள்ளாததால் திரும்ப வந்துவிட்டது. எனவே கோரிக்கை அறிவிப்பில் உள்ளவற்றை கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2), விதி 3 (1) இன் படி மாற்றுமுறையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், பாதுகாவலர்கள், செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகிய விவரங்கள் கோரிக்கை அறிவிப்பு கீழே குறிப்பிடப்பட்டவர்களுக்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (2) கீழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை	கடனீட்டுச் சொத்துகளின் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு நாள் நிலுவைத் தொகை ரூ.
7.	ருக்மணி, தேவராஜன் நட்ராயன் கடன் தொகை: ரூ.45,00,000/- கடன் எண்: HL00610100000005008686	திருப்பூர் பதிவு மாவட்டம், நல்லூர் துணை பதிவு மாவட்டம், திருப்பூர் வட்டம், வீரபாண்டி கிராமம் S.F.No.135/3, பரப்பளவு 0.25 ஏக்கர்கள், S.F.No.135/4, பரப்பளவு 2.77 ஏக்கர்கள், S.F.No.141/3, பரப்பளவு 4.35 ஏக்கர்கள் இதன் கிழக்கு பக்கத்தில் 0.81 ஏக்கர்கள் ஆக மொத்தம் 3 சர்வே தளங்களில் உள்ள பரப்பளவு 3.83 ஏக்கர்கள் நிலம் புதிய துணைப் பிரிவின்படி: S.F.No.135/3, பரப்பளவு 0.25 ஏக்கர்கள், S.F.No.135/4, பரப்பளவு 2.77 ஏக்கர்கள், S.F.No.135/2b, பரப்பளவு 0.24 ஏக்கர்கள், S.F.No.135/C2, பரப்பளவு 0.01 ஏக்கர்கள், S.F.No.135/5b, பரப்பளவு 0.05 ஏக்கர்கள், S.F.No.135/6a, பரப்பளவு 0.22 ஏக்கர்கள், S.F.No.141/3a2, பரப்பளவு 0.01 ஏக்கர்கள், S.F.No.141/3b2, பரப்பளவு 0.06 ஏக்கர்கள், S.F.No.141/3c2, பரப்பளவு 0.36 ஏக்கர்கள் மொத்தம் 6.69 ஏக்கர்கள் இதில் 0.65 ஏக்கர்கள் ஆக மொத்தம் 4.48 ஏக்கர்கள் உள்ள தளங்களில் மனை எண்.35 இன் பரப்பளவு 2400 ச.அடி. அதன் **எல்லைகள்: கிழக்கில்:** மனை எண்.35, **மேற்கில்:** மனை எண்.34, **வடக்கில்:** 25 அடி ரோடு, **தெற்கில்:** மனை எண்.30.	07.03.2024 ரூ.46,00,450/– (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து நானூற்று ஐம்பது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 13% வட்டி.

எனவே கடன்தாரர்/கள் மற்றும் உப–கடன்தாரர்/கள்/ ஜாமீன்தாரர்கள் ஆகிய நீங்கள் மேற்குறிப்பிட்ட கோரப்பட்ட தொகையை இங்கே மேலே குறிப்பிட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் இந்த அறிவிப்பின் 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள். தவறினால் கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து/களின் மீதான சட்டத்தின் கீழ் நடவடிக்கையை செயல்படுத்தும் நிர்பந்தத்துக்கு உள்ளாவார். அதேவேளையில் நீங்கள், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, எங்கள் ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை பெயர்மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 15.03.2024
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

GRIHUM
(முன்னதாக, பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)
பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036. கிளை அலகு: எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004.

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், **பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம்**, 2002 பிரிவு 13 (12) **இன் படியும்**, கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் **30.03.2024** தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B)	சுவாதீனத் தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணயவிலையில் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: HF/0118/H/20/100223 சுகுமார் (கடன்தாரர்), பிரியதர்ஷினி P (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி:10.07.2023 மொத்த நிலுவைத் தொகை: 10.07.2023 தேதியின் படி ரூ.15,86,496.89/– (ரூபாய் பதினைந்து லட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று தொன்னூற்று ஆறு மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும்) மற்றும் தொகை செலுத்தப்படும் காலம் வரையிலான ஆண்டு 13.25% வட்டிவீதத்திலான வட்டி.	கையக சுவாதீனம்	திருப்பூர் இணை I சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், மங்கலம் கிராமம், ஸ்ரீ காயத்ரி அவென்யூ, திருப்பூர் மாவட்டம், பின்கோடு: 641663, Sf.No.125/1, துணைப்பிரிவு Sf.No.125/1A, Sf.No.125/1B, இல் மனை எண்.15 இன் மேற்கு பகுதி பட்டா எண்.283,336 இன் படி, அடங்கியுள்ள அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய சொத்து.	ரூ.12,50,000/– (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ.1,25,000/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந் தாயிரம் மட்டும்)	28.03.2024 மாலை 5.00 மணிக்கு முன்பாக	ரூ.10,000/–	22.03.2024 (11 AM– 4 PM)	30.03.2024 (11 AM– 2 PM)	ஒன்றுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் **C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், சூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: வினோத் சௌகான், மின்னஞ்சல் முகவரி: delhi@c1india.com, தொடர்பு எண்.9813887931 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம்** இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். **ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.000651000460 மற்றும் IFSC CODE- ICIC0000006, 20,R.N. Mukherjee road, KOLKATA–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 28.03.2024 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும்.** மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். **+91 9567626050** மின்னஞ்சல் முகவரி **rahul.r1@grihumhousing.com** தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள **https://www.bankeauctions.com & www.grihumhousing.com–** ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி **8(6)** இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது **15** நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

நாள்: 15.03.2024, இடம்: திருப்பூர்
ஒம்/–அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)